ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 12,784 — 1961 නොවැම්බර් 27 වැනි සඳුද — 27.11.1961

12,784 ம் இலக்கம் — 1961 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக்கட்டளை இல. எம். எல். 1961/15.

உப உணவுப் பொருட்கள் (மாசிக்கருவாடு அல்லது பொனிற்றோ மீன்) மேலதிக நிரந்தர விலைகள்.

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங் களைக்கொண்டு, மாத்தளை மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), கார்டியே புஞ்சிகேலகே புத்ததாச தி சில்வா ஆகிய நான் இக்கட்டளையால்,

(i) இதனோடிருக்கும் 2 ம் அட்டவணையின் 3 ம், பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளைக் கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் குறித்த சட்டத்தின் அந்தரொன்றுக்கு விதிக்கப்பட்ட விலைக்கு மேலதிக விலையாகக்கூட்டி விற்கப்படும் மொத்த வியாபார விலையாகவும் குறித்த அட்டவணையின் 4 ம் பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளைக் கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் நிகர இருத்தலொன்றுக்கு விதிக்கப்பட்ட விலைக்கு மேலதிக விலையாகக்கூட்டி விற்கப்படும் சில்லறை வியாபார விலையாகவும் உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். இவற்றுக்கு மேலாக, குறித்த அட்டவணையின் 2 ம் பத்தியில் விபரிக்கப் பட்டிருக்கும் எல்லைகளில் விற்கப்படலாகாது,

(ii) இக்கட்டளையின் நோக்கங்களுக்காக,—

(அ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் எத்தொகையையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை மொத்த அந்தர் தொகையில் அல்லது அதிற் கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்றும் ;

(ஆ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் மொத்த அந்தருக்குக் குறைந்த எத்தொகையாவது பாவிப்புக்காக அல்லது உபயோகத்துக்காக் விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(iii) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட மாசிக்கருவாட்டை அல்லது பொனிற்றோ மீனை வேறொரு பொருளோடு கலந்து எவராவது இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள எந்த ஒரு இடத்திலும் விற்றலாகாதென இத்தால் ஆஞ்ஞையிடுகிறேன்.

(iv) இக்கட்டளையால் ஆகக்கூடியவிலை விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த எப்பொருளையேனும், தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது எவ்வாகனத்திலாவது, வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட பொருளில் ஒரு சிறு தொகையையும் இக்கட்டளையால் அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகள் ஒரு அங்குலத்துக்குக்குறையாத எண்களில் விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளையும் ஆகக்கூடிய விலையையும் வாங்குபவரால் நன்றாகப் பார்க்கக்கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்துப் பகிரங்க பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(v) இக்கட்டளையின் நோக்கத்துக்காக “ இருத்தல் ” அல்லது “ இரு ” என்பது அவோடுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன்.

(vi) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணை 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருள் எதனையும் மொத்தமாக அல்லது சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(அ) விற்பனை நடந்த தேதி ;

(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்) ;

(இ) விற்ற தொகைக்குக் கொடுத்த விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா, சில்லறை விற்பனையா என்பது.

(vii) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எதாவதொரு பொருள் விற்கப்படுமிடத்து அட்டவணையின் 3 லிருந்து நாலாவது வரையுள்ள பத்திகளில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் உறை எதாவது உபயோகப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1961 ம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ந் திகதி முற்பகல் 9.30 மணிக்குக் கையொப்பமிடப்பட்டது.

ஜி. பி. பி. தி சில்வா,
உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
மாத்தளை மாவட்டம்.

## முதலாம் அட்டவணை

எல்லை 1. கூம்பியாங்கொடலிந்தே மாத்தளை நகரசபை எல்லை.

எல்லை 2. (அ) ஓவிலிகந்த, பரநாகன் தென்ன, லெஹிகல, மாத்தளை நகரசபை எல்லை தவிர்ந்த மாத்தளை தெற்குக் காரியாதிகாரியின் பகுதி

(ஆ) வெலங்ககவத்த, பொல்லத்தகந்த தவிர்ந்த மாத்தளை கிழக்குக் காரியாதிகாரியின் பகுதியிலுள்ள மாத்தளை பள்ளேசியபற்று.

(இ) மாத்தளை நகரசபைக்குளிருக்கும் கூம்பியாங்கொட.

எல்லை 3. (அ) மாத்தளை வடக்குக் காரியாதிகாரியின் பகுதி.

(ஆ) மாத்தளை கிழக்குக் காரியாதிகாரியின் பகுதியிலுள்ள அமபங்கங்க கோறலேயும், கங்கல பள்ளேசிய பற்றுவும்.

(இ) மாத்தளை தெற்குக் காரியாதிகாரியின் பகுதியிலுள்ள ஓவிலிகந்த, லெஹிகல, பரநாகன்தென்னவும் மாத்தளை கிழக்குக் காரியாதிகாரியின் பகுதியிலுள்ள வெலங்ககவத்தவும்.

எல்லை 4. கங்கல உடசியபற்று, லக்கல உடசியபற்று, மாத்தளை கிழக்குக் காரியாதிகாரியின் பகுதியிலுள்ள லக்கல பள்ளேசியபற்று.

## இரண்டாம் அட்டவணை

| 1 ம் பத்தி | 2 ம் பத்தி | 3 ம் பத்தி | 4 ம் பத்தி |
|---|---|---|---|
| விபரம் | எல்லை | கொழும்பு நகரசபை எல்லைக்குள் மொத்த அந்தர் பொருட்களுக்கு விதிக்கப்பட்ட மொத்த வியாபார விலையுடன் சேர்த்துக் கணிக்கப்பட வேண்டிய விலைகள் | கொழும்பு நகரசபை எல்லைக்குள் நிகர இறுத்தல் பொருளுக்கு விதிக்கப்பட்ட சில்லறை வியாபார விலையுடன் சேர்த்துக் கணிக்கப்பட வேண்டிய விலைகள் |
| | | ரூ. ச. | ரூ. ச. |
| மாசிக்கருவாடு அல்லது பொனிற்றோ மீன் | 1 | 4 55 | 0 4 |
| | 2 | 4 95 | 0 5 |
| | 3 | 5 35 | 0 6 |
| | 4 | 5 95 | 0 7 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்குமேலாக அப்பொருட்களை விற்றலாகாது.

11-58.

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனுல் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது